1995 ஏப்ரல் 18]

குறிப்பாக பெண்களை வீட்டோடு நிறுத்தி விடுகிறார்கள். அருகிலே காவிரி ஆறு ஓடுகின்ற காரணத்தினால் வேலை வாய்ப்பு அதிகமாக இருப்பதால், பெண்களை வேலைக்கு அனுப்பிவிடுகின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று பிள்ளைகள் படிப்பதற்காக, தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு உதவித் திட்டங்களைக் கொடுத்து ஊக்குவிக்கின்ற இந்த நல்லாட்சியில் பெண்களினுடைய முன்னேற்றத்திற்காக பாடுபடும் எங்கள் அன்னையின் ஆட்சியில் இந்தத் தொகுதியினுடைய மக்கள் நலன் காக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்து, இந்த ஆண்டு கட்டாயமாக அப்பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு ஆணையிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே இருக்கின்ற மாநிலங்களிலேயே தமிழகத்திலே மட்டும்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண் கல்வியிலே அதிக அக்கறை செலுத்தி அதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்காக சாத்தியக் கூறுகளை அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாண்டமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பரமத்தி அரசு மேல்நிலைப் பள்ளியிலும் அந்தந்த பள்ளிகளிலே பயிலுகின்ற மாணவ மாணவியரைத் தவிர மற்றவர்களை அனுமதிப்பதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது தொடர்பாக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 336, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

336—

அரச்சலூரில் மத்திய கூட்டுறவு வங்கி கிளை அமைத்தல்

*37486—**திருமதி கவிநிலவு தர்மராஜ் :**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1995 ஏப்ரல் 18

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அரச்சலூரில் மத்திய கூட்டுறவு வங்கி கிளை ஒன்று அமைக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அரச்சலூரில் பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று 1-9-1985 முதல் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், அரச்சலூரில் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளைக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காக ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பமும் அளித்து, வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற மத்திய வங்கியினுடைய கிளை சொந்தக் கட்டிடத்திலே அரச்சலூரிலே இயக்கப்படுமா என்ற வினாவை நான் தொடுத்து இருந்தேன். ஆனால், மொடக்குறிச்சி ஒன்றியத்தை கொடுமுடி ஒன்றியமாக மாற்றி, சொந்தக் கட்டிடம் வேண்டும் என்ற வினாவை மத்திய வங்கி நடந்து கொண்டிருக்கிறதா என்ற அளவிலே வினாவே மாற்றப்பட்டு இருப்பதை நான் இப்போது தான் அறிகிறேன். இருந்தாலும்கூட, மத்திய வங்கி 1985-லே இருந்து இயங்கினாலும் அரச்சலூரிலே வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டு இருக்கிற காரணத்தினால் சொந்தக் கட்டிடத்தை அரச்சலூரியிலே மத்திய வங்கிக்கு கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளையாக காங்கேயம் சாலை கதவு எண் 24-இல் ஒரு வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அரச்சலூர், மொடக்குறிச்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதி என்கின்ற குறிப்பினை எனக்கு தந்திருக்கிறார்கள். கேள்வி எந்த வகையிலே தொடுக்கப்பட்டது என்பது குறித்தும் இங்கே என்னிடத்திலே விவரங்கள் இல்லை. ஆனால் இந்த அரச்சலூர் என்கின்ற பகுதியில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிற அந்த வங்கியினுடைய கிளையைச் சொந்த இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற அந்தக் கருத்தை அரசு

1995 ஏப்ரல் 18]

ஏற்று, அங்கே இருக்கின்ற அந்த வங்கியினுடைய நிதி நிலைமையைப் பார்த்து, கிடைக்கின்ற இடத்தையும் பார்த்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–05

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியினுடைய, ஒன்றியத்தினுடைய மக்கள் அத்தனை பேரும் விவசாயப் பெருங்குடி மக்களாகவும், நெசவாளர்களாகவும் இருக்கிறார்கள். இந்த வையகத்திலேயே விவசாயப் பெருங்குடி மக்களுடைய விடிவெள்ளியாகவும், நெசவாளர்களுடைய ஒளி விளக்காகவும் விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய புண்ணிய ஆட்சியிலே மத்திய கூட்டுறவு வங்கியிலே பெரியார் மாவட்டத்திலே அதிக முதலீடு செய்பவர்களாகவும், பெரியார் மாவட்டத்திலே அதிகக் கடன் தொகை பெறுபவர்களாகவும், பெரியார் மாவட்டத்திலே கடன் தொகையைச் சரியாகத் திருப்பிச் செலுத்தக்கூடியவர்களாகவும் உள்ள விவசாயிகளை, நெசவாளர்களை அதிகமாகக் கொண்டுள்ள என்னுடைய மொடக்குறிச்சி தொகுதி மக்கள்மீது கருணை கொண்டு, ஏற்கெனவே அரசுக்கு அனுப்பியுள்ள குறிப்புகளை வைத்து ஆவன செய்ய வேண்டும். அரசு புறம்போக்கு நிலம் 5 சென்ட் அளிக்கத் தயாராக இருக்கிறோம். அதற்குரிய ஆவணங்களை அரசிடம் நாங்கள் ஒப்படைத்திருக்கிறோம். கடந்த 2 ஆண்டுகளாகச் சொந்தக் கட்டிடம் வேண்டுமென்ற விண்ணப்பத்தை வைத்திருக்கிறார்கள். எதையும் சாதிக்கக்கூடிய ஆற்றல் படைத்திருக்கிற இதய தெய்வத்தினுடைய பொன்னான ஆட்சியிலே,

> "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்"

என்ற குறளுக்கேற்ப எண்ணியதை முடித்து, புரட்சித் தலைவியினுடைய புகழுக்கு மேலும் புகழ் சேர்க்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி பகுதியிலே ஒரு கிளையை அமைக்க வேண்டுமென்றும், அதற்குத் தனியான இடத்தை அவர்கள் தருவதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லி

யிருக்கிறார்கள். அந்த இடத்தினுடைய விவரங்களை எல்லாம் சேகரித்து, அதாவது அங்கே அந்த வங்கியினுடைய கிளை திறப்பதற்குத் தேவையான முதலீடு முதலாண்டுக்கு 30 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாகவும், அடுத்த ஆண்டுக்கு 20 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாகவும் அங்கே இருக்கும் வணிகப் பெருமக்கள் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து தேடித் தருவார்களானால், அந்த வேண்டுகோள் விரைவாக கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 337, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

337—

பஞ்சாயத்துகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்தல்

*21231—**திருமதி க. பழனியம்மாள்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

கிராமப் பஞ்சாயத்துகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கீடு செய்வதில் மாற்றம் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. கிராமப் பஞ்சாயத்தை பொறுத்தமட்டில், பஞ்சாயத்துக்களில் வசூலிக்கப்படும் வீட்டுவரிக்கு ஈடாக ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அரசு மான்யம் அளிக்கப்பட்டு வருகிறது. ஊராட்சிகளில் வசூலிக்கப்படும் ஸ்தல செஸ் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஈடு செய்யப்பட்டு அவ்வொன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையிலேயே பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியம் ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் 20 காசு வீதம் மானியம் அளிக்கிறது. பேரூராட்சிகளுக்கு 10 காசு வீதம் அளிக்கிறது. மைய அரசு திட்டமான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் நிதி மக்கள் தொகை